# திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள்

## தொகுப்பு - II



வெளியீடு :

பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.

2021

# திருக்குறள்
# ஆய்வுக் கட்டுரைகள்

## தொகுப்பு-II



வெளியீடு :
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்**
**இளைஞர் விவகார அமைச்சு,**
**வடக்கு மாகாணம்.**
**2021**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள் |
| தொகுப்பாசிரியர்கள் | : | தகைசார் வாழ்நாட் பேராசிரியர் அ. சண்முகதாஸ்.<br>முனைவர் ச. மனோன்மணி |
| பதிப்பு | : | 2021 |
| பக்கங்கள் | : | xiv + 182 |
| பிரதிகள் | : | 400 |
| வெளியீடு | : | பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.<br>கல்வி. பண்பாட்டலுவல்கள்.விளையாட்டுத்துறை<br>மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.<br>வடக்கு மாகாணம். |
| அச்சுப்பதிப்பு | : | எவகிறீன் அச்சகம். பிறைவேட் (லிமிட்டெட்)<br>இல.693. கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்.<br>தொ.பே. 021 221 9893 |
| ISBN | : | 978-624-5911-12-7 |

| | | |
|---|---|---|
| Title | : | Tirukkural Ayvuk Katturaikal<br>(Tirukkural Research Papers) |
| Compiler | : | Emeritus Prof. A. Sanmugadas,<br>Dr.S. Manonmani |
| Edition | : | 2021 |
| Pages | : | xiv + 182 |
| Copies | : | 400 |
| Published by | : | Dept of Cultural affairs,<br>Ministry of Education,<br>Cultural affairs, Sports and Youth affairs,<br>Northern Province. |
| Printed at: | | Evergreen Printers,<br>693, K.K.K. Road, Jaffna.<br>Tel. 021 221 9893 |
| ISBN | : | 978-624-5911-12-7 |

**கலாநிதி சண்முகராஜா சிறிகாந்தன்,**
மானிடவியல் முதுநிலை விரிவுரையாளர்,
சமூகவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# திருக்குறளில் சமூக முன்னேற்றம்

சமூக மேம்பாடு என்பது குறிப்பிட்ட சமூகத்தினைச் சேர்ந்த தனியன் களை நெறிமுறையான வகையில் சமூகமயப்படுதலுடன் தொடர்புடைய ஒரு செயன்முறை. நெறிமுறையான வழியென்பது ஒவ்வொரு சமூகத் திற்கும் உரித்தானதாகக் காணப்படும் சமூக-பண்பாட்டு விழுமியங்கள், நியமங்கள் தொடர்பான அறிவினை புகட்டி அவர்களின் மனப்பாங்கில் மாற்றத்தினை ஏற்படுத்துவதன் வழியாக சமூக நடத்தையினை சீரமைத்தல் எனலாம். ஒவ்வொரு சமூகத்திலும் மேற்குறிப்பிட்ட சமூக மேம்பாடு சார்ந்த செயற்பாடுகளை வினைத்திறனாக நடைமுறைப் படுத்தக்கூடிய வகையில் குடும்பம், சமயம், பாடசாலை, அரசு வரையாக பல்வேறுபட்ட நிறுவனங்கள் காணப்படுகின்றன. இவற்றிற்குப் புறம்பாக பல்வேறுபட்ட நூல்களும், இதிகாச, புராணக் கதைகளும் தனிமனித, சமூக மேம்பாட்டுடன் தொடர்புடைய முன்னேற்றச் செயற்பாட்டின் அரண்க ளாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக இந்திய சமூகத்தினரிடம் பகவத்கீதையும், மேற்கு ஐரோப்பிய சமூகத்தினரிடம் பைபிளும், அரேபிய சமூகத்திடம் திருக்குர்ஆனும் என எண்ணற்ற நூல்கள் தாம் சார்ந்து ஒழுகும் சமூகத்தினை முன்னேற்ற பல்வேறு சிந்தனை களையும், தத்துவார்த்தக் கருத்துக்களையும் முன்வைக்கின்றன.

எனினும் உலக மக்கள் அனைவரையும் எவ்வித பாரபட்சமுமின்றி நெறி முறையான வழியில் முன்னேற்றுதல் பொருட்டு எழுச்சி பெற்ற ஒரு பழம் பெரும் இலக்கியமாக காணப்படுவது திருக்குறள் ஆகும். திருக்குறளில் காணப்படும் சமூக முன்னேற்றம் பற்றியும் அதற்காக அவை குறிப்பிடும் வாழ்வியல் நெறிமுறைகள் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

## 2

சமூக மேம்பாட்டின் (social development) நடுமையமாக அமைவது சமூக முன்னேற்றம் (social progess) எனும் கருத்தியலாகும். இது சமூக மாற்றம் (social change), சமூக வளர்ச்சி (social growth), சமூக உரு மாற்றம் (social transformation) ஆகிய முதன்மையான கருத்தினங் களுடன் தொடர்புடையது. உண்மையில் சமூக முன்னேற்றம் என்பது குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் நன்மை விளைவிக்கக் கூடிய சமூக மாற் றங்களை ஏற்படுத்தி அதன் வழியாக சமூகத்தினை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்று அதனை சமூக மேம்பாட்டுக்குரிய வகையில் முன்னேற் றுதல் என மிகச் சுருக்கமாக வரையறை செய்யலாம். சமூக முன்னேற் றம் என்பது படிமலர்ச்சி எனும் கருத்தியலிலிருந்து வேறுபட்டது (Bernard 1922). சமூக முன்னேற்றம் என்பது ஒரு நெறிமுறையுடன் இணைந்த கருத்தாகும். நடைமுறைகள் மற்றும் வளர்ச்சியின் குறிக்கோள்களின் அடிப்படையில் விரும்பத்தக்கதாகக் கருதப்படும் திசையில் மக்களின் வாழக்கையின் முக்கிய நிலைமைகளின் மாற்றம் அல்லது முன்னேற் றம் என சமூக முன்னேற்றத்தினை வரையறை செய்யலாம் (விரிவுக்கு காண்க Noll 2013). இந்நிலையில் மேற்குறிப்பிட்ட சமூக மேம்பாட்டின் இலக்கினை மையமாகக் கொண்ட சமூக முன்னேற்றம் பற்றிய கருத்தியல் சிந்தனை திருக்குறளில் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது என்பதனை இக் கட்டுரையில் விரிவாக நோக்குவோம்.

## 3

தமிழர் பண்பாட்டு மேன்நிலை (advancement) என்பது பழமை யானது. தமிழர்கள் இற்றைக்குப் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே உழுது பயிர் செய்து தன்னுடைய பொருளாதாரத்தை மட்டுமன்றி சமூக,

சமய, அரசுசார் நிலையில் செழிப்புற்று இருந்தமையினை வெளிப் படுத்தக் கூடிய தொல்லியல் ஆதாரங்கள் காணப்படுகின்றன. இவற்றுக்கு அப்பால் இலக்கியச் சான்றாதாரங்கள் பண்டைத் தமிழர் பண்பாட்டின் செழுமையினையும் சிறப்பினையும் சான்றுதிப்படுத்துகின்றன. பழந் தமிழ் இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதிணென்கீழ்க் கணக்கு, பக்தி இலக்கியங்கள் அனைத்துமே மிகச் சிறந்த பண்டைத் தமிழர் பண்பாட்டு தகவலாளிகள் (cultural informants). அண்மைய கீழடி அகழாய்வு முடிவுகள் தமிழர் பண்பாட்டின் மேந்நிலைப்பட்ட தோற்று வாய்களை கி.மு 5 நூற்றாண்டு அண்மித்துக் கொண்டு சென்றுள்ளது. எனினும் அதனை ஒத்த காலப்பகுதியில் எழுச்சி பெற்ற காதற் கவிதை களும், வீரம் பேசும் பாக்களும், அறமுரைக்கும் பனுவல்களும், பக்திச் சுவை ததும்பும் பாடல்களும் பண்டைத் தமிழர் பண்பாட்டின் வாழ்வியல் மேந்நிலையினை வெளிப்படுத்தி நிற்கின்றன.

தமிழர் சமூக, பண்பாட்டு வரலாற்றில் மிக முதன்மையான பண்பாட்டு திருப்பு முனைகளுடன் கூடிய காலமாக அமைவது சங்கமருவிய கால மாகும். இதற்கு முன்னைய சமூக வாழ்வியலில் வெளிப்பட்டு நின்ற காதல் வாழ்வியல் சூழமைவும் அதனோடிணைந்த ஏனைய விடயங்களும் பண்டைத் தமிழ்ச் சமூக முன்னேற்றத்திற்கான புதிய வழிகளை வேண்டி நின்றன. களப்பிரருடைய வருகையும், சமண பௌத்த சமயச் சிந்தனை யின் மேலோங்கிய தன்மையும் அறநிலைப்பட்ட சமூக வாழ்வின் அவசி யத்தினை எடுத்துரைக்க பதினெண்கீழ்க் கணக்கு நூல்களாக எழுச்சி பெற்றன. இக்காலச் சூழமைவின் விளைபொருளாக எந்தவொரு சமூகச் சார்பற்ற, மதச் சார்பற்ற, அரசியல் சார்பற்ற ஒரு உலகப் பொதுமையாக திருவள்ளுவரினால் எழுதப்பட்ட திருக்குறள் தோற்றம் பெற்றது. இந்நூல் பண்டைத் தமிழர் வாழ்வின் முன்னேற்றத்திற்கான வரன்முறைகளை முழுதளாவிய நிலையில் வெளிப்படுத்தி நிற்கின்றது.

சமூக முன்னேற்றம் எனும் சொல் ஒரு பன்முகப்பட்ட சிந்தனையின் ஒருமுகப்படுத்தப்பட்ட விடயம் (unity in diversity). அதாவது சமூக முன் னேற்றம் எனும் கருத்து நிலையானது இயல்பாகவே தன்னிலையில் பொருளாதார முன்னேற்றம், ஆன்மீக முன்னேற்றம், அரசியல்

முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், ஒழுக்க முன்னேற்றம் போன்ற எண்ணற்ற சமூக மேம்பாட்டு விடயங்களுடன் ஒட்டியுறவாடும் கருத்தினங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. 130 அதிகாரங்களில் 1330 குறட்பாக்களின் வழியாக பல லட்சோப லட்சம் சமூக முன்னேற்றச் சிந்தனையின் ஊற்றுக்களின் மூலமாக திருக்குறள் காணப்படுகின்றது. அவை அனைத்தினையும் பின்வரும் அடிப்படைகளில் மிகச் சுருக்கமாகவும், செறிவாகவும் நோக்கலாம்.

## நீதி நெறிமுறைசார் சமூக முன்னேற்றம்

அறம், பொருள், இன்பம் மற்றும் வீடு என்பது இந்திய மக்களின் அடிப் படை வாழ்வியல் கோட்பாடாகும். ஒவ்வொரு தனியனும் மேற்குறிப்பிட்ட நான்கு விடயங்களை முறையாக சார்ந்து வாழ்தலின் வழியாக தன்னு டைய சமூக, பொருளாதார மற்றும் ஆன்மீக முன்னேற்றத்தினை அடைய முடியும் என்பது மக்களின் நம்பிக்கை. மனித வாழ்வியலில் அறம்-ஒழுக்கம்-நீதி என்பது தலையாயது. அறம் வழுவிய எதுவும் சமூக முன்னேற்றமாகக் கருதப்படாது. இந்நிலையில் திருக்குறள் மனித சமூக முன்னேற்றத்தின் முதற்படியான அறம் சார்ந்த முன்னேற்றத்தினை பன்முக நோக்கில் வெளிப்படுத்தியுள்ளது.

பண்டைய இந்திய சமூகங்களிடையே அறம், தருமம் என்று சொல்லப் பட்ட விடயங்கள் அனைத்தினையும் நீதி (justice) எனும் பொருளில் இன்று சமூக விஞ்ஞானிகள் பயன்படுத்தி வருகின்றனர். நீதி என்பது சமூக வாழ்வியல் கட்டமைப்பின் அடிப்படை. நீதி தவறிய வாழ்வு என்பது முன்னேற்றகரமான ஒன்றாக சமூகத்தினால் பார்க்கப்படவில்லை. பாண் டிய மன்னன் தன்னுடைய நீதி தவறியதை உணர்ந்தவுடன் அவன் உயிர் பிரிந்தமை தொடர்பாக சிலப்பதிகாரம் விபரிப்பதன் வழியாக நீதி என்பது சமூக வாழ்வியலின் ஒப்பற்ற தன்மையினைக் காட்டுகின்றது. இந் நிலையில் திருக்குறலில் சமூக முன்னேற்றத்துடன் இணைந்த நீதி நெறிமுறை சார்ந்த முன்னேற்றம் மிகவும் முதன்மையாகவும் விரி வாகவும் பேசப்படுகிறது. திருக்குறள் காலத்திற்கு முன்னரே நீதி என்பது சமய இலக்கியங்களில் விரவிக் காணப்பட்டுள்ளன. திருவிவிலியமும்,

திருகுர்ஆனும், பகவத்கீதையும் நீதியை ஒரு அறம்சார் விடயமாக விவரித்துள்ளனர். எனினும் அவற்றில் காணப்படும் அறம் அல்லது நீதி என்பது சமயம் எனும் சாயம் பூசப்பட்டு காணப்படுவதினால் உலகப் பொது நீதிக்குச் சற்று விலகிக் காணப்படுகின்றது. ஆனால் திருக்குறளில் பேசப்படும் நீதி என்பது இன்று பேசப்படும் சமூக நீதிக்கு (social justice) ஒப்பானது.

சமூக நீதி என்பது பொதுவாக அதிகாரம், வளங்கள் மற்றும் கடமை களின் நியாயமான மற்றும் சமமான பரம்பல் நிலைமையினை குறித்து நிற்பதாக அமைகின்றது. அதாவது அனைத்து மக்களும் தத்தமது இன, இனத்துவ, பால்நிலை, சமூக அந்தஸ்து வேறுபாடுகள் கடந்த நிலையில் தமக்குரியதை பெற உரிமையுள்ளவர்களாகக் விளக்குகின்றது. பெருமை எனும் அதிகாரத்தில் அனைத்து உயிர்களும் பிறப்பால் ஒன்றே. அங்கே இன, நிற மற்றும் பால் நிலை ரீதியான உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடு என்பது நிதர்சனமற்றது.

*பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான் (972)*

மேற்குறிப்பிட்ட சிந்தனை சமூக நீதியின் மிகப் பெரிய மைல்கல் எனலாம். திருக்குறளில் பிரதான மூன்று பிரிவுகளில் (பால்) முதன்மை யாக அமைவது அறத்துப் பால் ஆகும். அதாவது முதல் உள்ள 32 அதி காரங்களும் பாயிரம் உள்ளடங்களலாக இல்லறம், துறவறம், ஊழ் வினை ஆகிய விடயங்களை உள்ளடக்கி அக்காலத்திற்கு மட்டுமன்றி இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் உகந்த நீதி நெறிசார்ந்த சமூக முன்னேற்றச் சிந்தனைகளைக் கொண்டு காணப்படுகின்றது. நீதி நெறிமுறை தவறிய வாழ்வினால் ஒருவன் அடையும் அனைத்தும் அவனை துன்பத்திற்கு இட்டுச் செல்லும் என்பதனை

*அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்*
*புறத்த புகழு மில (39)*

எனும் குறட்பாவின் வழியாக ஒருவன் தன் வாழ்நாளில் அறநெறி தவ

றாது வாழ்தல் எனப்து அவனுடையதும் அவன் சார்ந்த சமூகத்தினதும் முன்னேற்றத்தின் ஊற்றுக் கண்ணாக இருப்பதனை தெளிவாகக் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. ஆகவே சமூக முன்னேற்றம் என்பது நீதி நெறிமுறை சார்ந்த வாழ்வியல் முன்னேற் றத்துடன் இணைந்து காணப்படுகின்றமையினை திருக்குறளின் வழியாகக் காணலாம்.

### கல்வி சார் சமூக முன்னேற்றம்

சமூக மேம்பாட்டின் மிக முதன்மையான குறிகாட்டிகளில் ஒன்றாக அமைவது கல்வி சார் முன்னேற்றம். சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தனி யனும் அவன் சார்ந்த சமூகத்தினரும் கல்வியின் வழியாக வளர்த்துக் கொள்ளும் அறிவு, திறனாற்றல்கள் அனைத்தும் தனியன்களுக்கு மட்டுமன்றி அவர்கள் வாழும் சமூகத்தின் முன்னேற்றத்தின் அடிப் படைக்கும் வலுச் சேர்ப்பாதாக அமையும். சமூக முன்னேற்றத்தின் அடுத்த முக்கிய பொருண்மையாக அமையும் கல்வி முன்னேற்றம் ஆகும். கல்வி சார் சமூக முன்னேற்றம் தொடர்பாக திருக்குறள் தனியே கல்வி எனும் அதிகாரத்தின் வழியாக எடுத்துக் கூறியிருப்பதுடன் கல்லாமை, கேள்வி மற்றும் அறிவுடைமை போன்ற அதிகாரங்களும் மக்களிடையே கல்வி சார் முன்னேற்றத்தினை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

திருக்குறளில் கல்வி எனும் அதிகாரத்தில் கல்வியின் முக்கியத்து வத்தினை தனியனுடைய இரண்டு கண்களுக்கும் உவமைப்படுத்தி குறிப்பிடுகின்றது. அதாவது ஒரு தனிமனிதனுடைய வாழ்வில் கண் எவ்வளவு முக்கியமோ அதேயளவு முக்கியத்துவம் வாய்ந்தது அவன் கற்ற கல்வி. கல்வியின் அடிப்படையாக இருப்பது எண்களும், எழுத்துக் களும் ஆகும். ஒரு தனியனுடைய கிரகித்தல், ஞாபகங்கொள்ளல், அதனை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றிற்கு அடிப்படை அவனிடம் காணப்படும் அறிவு. அறிவிற்கு மூலாதாரமாக அமைவது எண்ணும் எழுத்தும். இங்கு தமிழ் என்றோ ஆங்கிலம் என்றோ குறிப்பிடப் படவில்லை எவனொருவன் தன்னை சமூக முன்னேற்றம் நோக்கிச் அசைவியக்கம் போடுகின்றானோ அவனுக்கு இவ்விரண்டும் முதன்மை

யானது. ஒருவனுக்கு கல்வி என்பது அவனுக்கு மட்டுமன்றி அவன் சார்ந்து வாழும் சமூகத்திற்கும், அவன் இறந்த பிற்பாடும் கூட பயன்மிக்க தாக அமையும் என்பதனை

*ஒருமைக்கண் தான்கற்ற கல்வி யொருவற்*
*கெழுமையு மேமாப் புடைத்து (398)*

மேற்படி குறள் தெளிவாகவே கூறியுள்ளது. இவ்வாறாக சமூக முன் னேற்றத்தின் முதன்மையன விடயங்களில் ஒன்றாக கல்வி சார் முன் னேற்றத்துடன தொடர்புடைய சிந்தனைகளை திருக்குறளில் காணலாம்.

**பொருளாதாரம் சார் சமூக முன்னேற்றம்**

மனிதன் இயற்கையின் ஓர் அலகு. எனினும் அவனுடைய வாழ்வு முன்னேற்றம் அடைவதற்கு அடிப்படை பொருள். இன்று உலக நாடுகள் அனைத்தும் தங்களிடம் உள்ள பொருட்களை அடிப்படையாகக் கொண்டு பிரிந்து காணப்படுகின்றன. ஒரு சில நாடுகள் தங்களை வளர்ச்சியடைந்த அல்லது மேம்பாட்டை அடைந்த நாடுகள் என்றும் இன்னும் சில பொரு ளாதார செழிப்பை நோக்கி நகர்ந்து செல்லும் நாடுகள் என்றும், இன்னும் சில பொருளாதாரத்தில் நலிவுற்ற வறிய நாடுகளாக காணப்படுகின்றன. இவ்வகையான சமூகத் தரப்படுத்தலின் அடிப்படையாகக் காணப்படுவது பொருள்சார் முன்னேற்றத்தின் வேறுபட்ட நிலவரமே இன்றைய பொரு ளாதார நிலவரத்தினை இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னரே திருக்குறள் மிகத் தெளிவாக சுட்டியுள்ளது. சமூக முன்னேற்றத்தின் முதன்மையான அலகுகளில் ஒன்றாக பொருளாதார முன்னேற்றம் பற்றிய சிந்தனைகள் திருக்குறளில் காணப்படுகின்றன.

பொருட்பாலில் ஒழிபியலில் உழவு எனும் அதிகாரத்தில் வேளாண் மையின் முக்கியத்துவத்திதை குறித்துரைக்கும் திருக்குறள் அதனைத் தொடர்ந்து வரும் அதிகாரத்தில் வறுமையும், அதனோடிணைந்த சமூக விளைவுகளையும் முறையே நல்குரவு, இரவு, இரவச்சம் போன்ற அதிகாரங்களை முறைவைப்புச் செய்துள்ளமை சமூக முன்னேற்றம் என்பது பொருளாதாரம் சார்ந்த முன்னேற்றத்துடன் இணைந்து காணப் படும் தன்மையினை வெளிப்படுத்தியுள்ளது. பண்டைய மனிதப் பண்பாட்

டின் முதன்மையான பொருளாதாரம் விவசாயம். எளிமையாகக் குறிப்பிட வேண்டுமாயின் நிலவளத்தினையும் நீர்வளத்தினையும் அடிப்படை ஆதாரமாகக் கொண்டு மக்கள் தங்கள் வாழ்வியல் தேவைகளை நிறை வேற்றுதல் ஏற்படுத்திக் கொண்ட உணவு உற்பத்தி சார்ந்த செயன்முறை. அதுவும் குறிப்பாக இந்திய பெருநிலப்பரப்பும் அங்கு காணப்பட்ட நீர்வளம், நிலவளம் பண்டைய சமூகத்தின் பொருளாதாரத்தின் மையத் தூண்க ளாகக் காணப்பட்டுள்ளன. இவ்விரு இயற்கை வளங்களினை அடிப்படை யாகக் கொண்ட விவசாயத்தின் சிறப்பினை

*சுழன்று மேர்பின்ன துலக மதனா*
*லுழந்து முழவே தலை (931)*

எனும் குறள் வழியாக குறிப்பிட்டுள்ளது. பல்வேறுபட்ட தொழில் வகைகள் மக்களிடையே காணப்பட்டாலும் அவை அனைத்திற்கும் மேலாக காணப்படுவது மக்கள் அனைவருக்கும் உணவைத் தருகின்ற உழவுத் தொழிலே சிறந்தது என்று விவசாயத்தினை குறிப்பிட்டுள்ளது. இன்று உலகமானது இலத்திரனியல் தொழில்நுட்ப யுகத்திற்குள் காணப்படு கின்றது. ஆனாலும் மனிதன் மட்டுமல்ல உலகிலுள்ள அனைத்து உயிரி னங்களின் உடற் பசிப்பிணியைப் போக்குவதற்கு விவசாயமே அவசி யம். இதுவே உண்மையான பொருளாதார முன்னேற்றம். இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பொருளாதார முன்னேற்றத்தின் ஆணி வேராக விவசாயத்தினையும், அதன் வளர்ச்சியினையும், அதன் பராமரிப்பு முறையினையும் திருக்குறள் உழவு எனும் அதிகாரத்தின் வழியாக கூறியிருப்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

பொருளாதார பின்னடைவு அதாவது வறுமை தனியனுடைய வாழ்வை மட்டுமல்ல சமூகத்தின் வாழ்வினையும் மிகப் பெரிய கேள்விக் குறியாக்கிவிடும் என்பதை நல்குரவு எனும் அதிகாரத்திலும் இரவு, இரவச்சம் போன்ற அதிகாரங்களிலும் கூறப்பட்டுள்ளது.

*நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்*
*சொற்பொருள் சோர்வு படும் (1046)*

எனும் குறட்பா பொருளாதார இழிநிலை தனியனுடைய முன்னேற் றத்தினை எவ்வகையில் கீழ்நிழைக்குத் கொண்டு செல்லும் என்பதனை

வெளிப்படுத்துகின்றது. பொருளாதார முன்னேற்றம் என்பது தனியே தனிமனிதன் சார்ந்து மட்டுமல்ல இது இயற்கையுடன் தொடர்புபட்டது. இயற்கையினைப் போஷிக்கத் தவறும் பட்சத்தில் ஏற்படும் அழிவுகளில் ஒன்றான வறட்சி இயல்பாகவே பொருளாதார முன்னேற்றத்தை தடுத்துவிடும். இன்றும் பல நாடுகள், குறிப்பாக இற்றைக்கு 3000 வருட பழமையாக நாகரிகம் அடைந்த வரலாற்றைக் கொண்ட நாடுகள் மிகப் பெரிய பொருளாதார பின்னடைவினைச் சந்தித்து சமூக முன்னேற்றமற்ற நிலையில் இருக்கின்றன. இதனால் தான் திருக்குறளின் இரண்டாவது அதிகாரம் வானின் சிறப்பையும் நீரின் முக்கியத்துவத்தை பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

*நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்*
*வானின் றமையா தொழுக்கு (20)*

இன்று எல்லா நாடுகளும் தன்னிறைவுப் பொருளாதாரம் என்பதற்கு அப்பால் ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. இவ்வைகயான பொருளாதாரக் கட்டமைப்புக்கு உற்பத்தி மீகை என்பது அவசியம். ஒருவன் தன்னுடைய சுய பொருளாதாரத்தினை நன்னிலையில் பேணி வந்தால் அது எதிர்கால ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு மிக சிறந்த அடிப்படையை வழங்கும் என்பதனை திருக்குறள் தெளிவாகவே உழவு எனும் அதிகாரத்தின் வழி குறிப்பிட்டுள்ளது. இவ்வதிகாரத்தில் சுய பொருளாதாரமான விவசாயத்தினை எவ்வகையில் மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதனை குறித்துரைத்துள்ளமை இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது. இவ்வாறாக பொருளாதார முன்னேற்றம் என்பது சமூக முன்னேற்றத்தின் முக்கிய படிநிலை என்பது திருக்குறள் வழியாக எடுத்துக் கூறப்படுகின்றது.

### அரசியல்சார் சமூக முன்னேற்றம்

அரசியல்சார் சமூக முன்னேற்றம் என்பது சமூக மேம்பாட்டின் அடிப்படைப் பண்பியல்புகளில் ஒன்றாகும். மனிதப் படிமலர்ச்சியின் முதன்மையான பண்பாட்டியல் இயக்கவிசைகளில் ஒன்றாக அமைவது கூட்டு வாழ்வு ஆகும். கூட்டு மனித சமூக வாழ்வினை நெறிப்படுத்த தோற்

றம் பெற்ற பல்வேறு கூறுகளில் ஒன்றாகக் காணப்படுவது அரசு எனும் நிறுவனமாகும். ஒரு சமூகம் நாகரிக நிலையினை பெறுதலின் முதன்மையான பண்புக்கூறுகளில் ஒன்றாக அரசுசார் கட்டமைப்பின் தோற்றத்தினையும் சைல்டு (Childs) முன்வைத்துள்ளார் (விரிவுக்கு காண்க பக்தவத்சல பாரதி 2005). இந்நிலையில் அரசியல்சார் சமூக முன்னேற்றம் என்பது சமூக முன்னேற்றத்திற்கான அடிப்படை குறிகாட்டி களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

சமகால உலக சமூகங்களிடையே அரசியல்சார் நிறுவனக்கட்ட மைப்பில் காணப்படும் பலவீனங்கள் இன்று அச் சமூகங்களையும் அவர்கள் வாழும் நாட்டினையும் பொருளாதார ரீதியாக மட்டுமன்றி சமூக வளர்ச்சி ரீதியாகவும் பின்தங்கிய நிலையில் வைத்துள்ளது. திருக்குறள் பொருட்பாலில் அரசியல், அங்கவியல் மற்றும் ஒழிபியல் போன்ற பிரதான மூன்று இயல்களிலும் அரசு மற்றும் அரசியல் சார் சமூக முன்னேற் றத்தின் அடிப்படைகளை மிகத் தெளிவாகவே கூறியுள்ளது. அரசியல் எனும் இயலில் செங்கோன்மை என்பது தொடர்பாக விரிவாகவே கூறி யுள்ளது. அதாவது ஒர் அரசன் தன்னுடைய நாட்டினை எவ்வகையில் சிறப்புற ஆட்சி செய்தல் அவசியம் என்பதனை செங்கோன்மை எனும் அதிகாரத்தில் விரிவாகவே குறிப்பிட்டுள்ளது.

ஜனநாயகம் (democracy), நல்லாட்சி (good governance) ஆகிய கருத்தியல்கள் சமகால அரசறிவியல் விஞ்ஞானத்தின் முதன்மையான கருத்தியல்களாகும். ஒரு நாடு எவ்வளவுக்கு ஜனநாயகப் பண்பினையும் நல்லாட்சி திறன்களையும் தன்னுடைய குடிமக்களிடையே வளர்த்துக் கொள்ளுகின்றது என்பது அந்நாட்டின் அரசியல்சார் சமூக முன்னேற் றத்தின் மிக முதன்மையான குறிகாட்டியாகக் கணிக்கப்படுகின்றது. இன்று விவாதிக்கப்படும் ஜனநாயகத்தினை, நல்லாட்சிப் பண்புகளை திருக்குறள் செங்கோன்மை எனும் சொல்லின் வழியாக பல நூறு வருடங்களுக்கு முன்னரே குறித்துரைத்துள்ளது. திருக்குறளுக்கு உரை எழுதியவர்களுள் பரிமேலழகருக்கு அடுத்ததாக வைத்து நோக்கப்படுபவர் மணக்குடவர் இவர் செங்கோன்மையானது செவ்விதாகிய முறை செய்தல் உடைமை. குற்றமும் குணமும் தூக்கி ஆராய்தலால் கோல்

என்றார்" அது கோடாமையினால் செங்கோலாயிற்று என விளக்கம் தருகின்றார்.

செங்கோன்மை என்பது செவ்விய கோல் அதாவது வளையாத கோல் போன்ற நேர்மையான ஆட்சியைக் குறித்து நிற்கும். குடிமக்களின் உயிரையும் உடைமையையும் பாதுகாக்கும் அரசியல் அறத்தைப் பேணு வது ஆட்சியாளரது கடமை. அரசாட்சியில் குற்றத்தையும் குணத்தையும் சீர்தூக்கி ஆராய்ந்து செம்மையாக ஆள்வதே செங்கோன்மையாகும். இதனை பின்வரும் குறட்பா மிகத் தெளிவாகவே கோடிட்டு காட்டுகின்றது.

*ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்த தியார்மாட்டுந்*
*தேர்ந்துசெய் வஃதே முறை (541)*

நடுநிலை தவறாமல், யாரிடத்திலும் இரக்கம் காட்டாமல், குற்றத்தின் கடுமையை ஆராய்ந்து அதற்குத் தகுந்த தண்டணையை விதிப்பதே அரசனின் முறை என இடித்துரைப்பது மக்கள் அனைவரும் சமம் எனும் உன்னத கருத்தியலை அன்றே வலிறுத்தியிருப்பது அரசியல்சார் சமூக முன்னேற்றத்திற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதற்கு அடுத்த அதிகாரத்தில் கொடுங்கோன்மையின் இயல்புகளையும் அதனால் மக்க ளுக்கும், நாட்டிற்கும் மற்றும் அரசனுக்கும் ஏற்படும் தீய விளைவுக ளையும் எடுத்துரைத்திருப்பது ஒருவன் ஏன் செங்கோன்மையுடனான ஆட்சி செய்ய வேண்டும் என்பதனை வெளிப்படுத்தி நிற்கின்றது.

*முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி*
*யொல்லாது வாயனம் பெயல் (559)*

ஆட்சிமுறை தவறி மன்னன் ஒருவன் ஆட்சி செய்தல் பருவமழைப் பொய்த்துப் போய் நாடு மிகப்பெரிய துன்பத்தினை அனுபவிக்க நேரும் என்று கூறப்பட்டுள்ளது. ஜனநாயக வழியில் நெறிதவறி ஆட்சி செய்யும் அரசாங்கங்களால் மக்களும், அந்தந்த நாடுகளும் எதிர்கொள்ளும் பிரச்சி னைகளை திருக்குறள் கொடுங்கோன்மை எனும் கருத்துநிலையின் அடிப்படையில் விளக்கியிருப்பது அரசியல்சார் சமூக முன்னேற்றத்தின் பன்முகத் தன்மையினை காட்டி நிற்கின்றது.

அரசு மற்றும் அரசியல் என்பது ஒற்றை தன்மையான ஒன்றல்ல. அது மக்கள், ஆட்சி எனும் கருத்தியல் சட்டங்களுக்குப் புறம்பாக நீதி, நிதி, வளமுகாமைத்துவம் போன்ற இன்னோரன்ன விடயங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவையனைத்தின் கூட்டிணைவின் வெளிப்படையாகவே அரசியல்சார் சமூக முன்னேற்றம் தோற்றமளிக்கின்றது. இந்நிலையில் திருக்குறள் ஒரு நாட்டின் வருமானம், வரிமுறை, நீதி நிர்வாகம், அரசு செயல், தேர்வு முறை போன்ற அனைத்தினையும் அரசாட்சியின் அங்கங்களாக விளக்கியுள்ளது. இவை அனைத்தும் மக்களின் வாழ்வினையும் நாட்டின் அபிவிருத்தியையும் நேரடியாகப் பாதிக்க கூடியன. இதனால் அங்கவியல் எனும் இயலில் அமைச்சுத் தொடங்கி உட்பகை வரையாக உள்ள அதிகாரங்களில் அரசினுடைய உட்கட்டமைப்பு, அரசாட்சியின் திறன், ஆட்சிமுறையின் தனித்துவங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் விதந்துரைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக நாடு எனும் அதிகாரத்தினை எடுத்து நோக்கினால் ஒரு முன்னேற்றகரமான நாடு என்பதனை

*தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்*
*செல்வருஞ் சேர்வது நாடு* ***(731)***

நாட்டு மக்களின் தேவைக்கு குறைவிலாத விளைபொருளும், தகுதியுடைய சான்றோர்களும், தாழ்வில்லா செல்வத்தை உடையவரும் ஒன்று சேர்ந்திருப்பதே நாடு என குறிப்பிட்டுள்ளது. இவ்வகையான நாடு ஒன்றினை அரசரும் மக்களும் பெற்றிருத்தல் என்பது அரசியல்சார் சமூக முன்னேற்றம் ஆகும்.

### ஆரோக்கியம் சார் சமூக முன்னேற்றம்

ஆரோக்கியம் மற்றும் நன்னிலையில் இருத்தல் என்பது தனிமனித மற்றும் சமூக வாழ்வியல் முன்னேற்றத்தின் அடிப்படையாகும். இந்நிலையில் ஆரோக்கியம் என்பதனை உலக சுகாதார அமையம் (WHO) பின்வருமாறு வரையறை செய்கின்றது. ஆரோக்கியம் தனியே நோய் அல்லது பலவீனம் அற்ற நிலை என்பதனை குறித்து நிற்கவில்லை அது உடல், மன மற்றும் சமூக நல்வாழ்வு ஆகியவற்றுடன் ஒன்றிணைந்த

நிலை ஆகும் (விரிவுக்கு காண்க Callahan 1973). இவ்வாறு உலக சுகாதார அமையத்தினால் குறித்துரைக்கப்பட்ட ஆரோக்கியத்தினை முழுமையாக திருக்குறள் வெளிப்படுத்தியுள்ளது. அதாவது தனிமனித ஒழுக்கம் சார்ந்த முன்னேற்றங்கள், சமூக கட்டுக்கோப்புடன் இணைந்த முன்னேற்றம் மற்றும் ஆன்மீக முன்னேற்றங்கள் போன்ற அனைத்தினையும் திருக்குறள் முழுவதும் விரவிக் கிடப்பதனை காணலாம்.

மனித வாழ்வினை முழுமைப்படுத்தும் ஒன்றாகவே ஒழுக்கம் காணப்படுகின்றது (Sumathi and Valliammal 2018) தனிமனித ஒழுக்கம் என்பது தனியனுடைய கல்வி, கேள்வி ஞானங்களுக்கு அப்பால் அவனுடைய தனிப்பட்ட நடத்தைகளான நட்பு, பெரியாரை மதித்தல், ஒழுக்க கட்டுப்பாட்டை பின்பற்றுதல், வாய்மை, பொய்யுரைக்காமை, நேர்மையாக இருத்தல், புலனடக்கத்தைப் பேணுதல் போன்ற இன்னோரன்ன விடயங்களுடன் தொடர்புடையது. இவ்வகையான தனிமனித முன்னேற்றத்துடன் தொடர்புடைய எண்ணற்ற கருத்தினங்கள் திருக்குறளில் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக திருக்குறளில் பெருமை எனும் அதிகாரத்தில் ஒருவன் எவ்வகையில் பணிவுள்ளவனாக இருத்தல் என்பது அவசியம் என்பதனை பின்வரும் குறள் வெளிப்படுத்துகின்றது.

*பணியுமாம் மென்றும் பெருமை சிறுமை*
*யணியுமாந்த தன்னை வியந்து (978)*

மேலும் ஒருவன் ஏனையோருடன் உள்ளத்தால் பொய்யாது ஒழுகி வருவான் ஆகின் அவன் உலக மக்கள் அனைவராலும் மிகவும் விரும்பப்படக் கூடியவனாக வாழ்வான் என்பதனை

*உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா*
*ருள்ளத்து ளெல்லா முளன் (294)*

எனும் குறட்பா வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாறாக தனிமனித நேரிய சிந்தனைப்பாற்பட்ட முன்னேற்றச் சிந்தனைகளை மட்டுமன்றி உடல் ஆரோக்கியம் சார்ந்த முன்னேற்றம் தொடர்பாகவும் திருக்குறள் தெளிவாகவே கூறியுள்ளது. மருந்து எனும் அதிகாரத்தின் நோயின் முதற் காரணியான உணவுப் பழக்கவழக்கத்தினைக் குறித்துரைக்கும்

திருக்குறள் நோய்க்கான சிகிச்சை என்பதும் குறிப்பிட்ட காலதேச வர்த்தக மானத்துடன் இணைந்த தன்மையினையும் குறித்துரைத்துள்ளது. ஒருவனுடைய ஆரோக்கிய முன்னேற்றம் என்பது

*மிகினுங் குறையினு நோய் செய்யு நூலோர்*
*வளிமுதலா வெண்ணிய மூன்று (941)*

எனும் குறட்பாடலில் உணவும் செயல்களும் ஒருவன் பகுதிக்கு ஒத்த அளவினவன்றி அதனின் மிகுமாயினும் குறையுமாயினும் அவனுக்கு பண்டைய தமிழ் பாரம்பரிய மருத்துவத்தில் கூறப்படும் வாதம், பித்தம், சீதம் போன்றவற்றினால் ஏற்படும் நோய்கள் என்பதைத் தெளிவுறக் கூறியுள்ளது. இன்று உடற் திணிவுச் சுட்டெண் (BMI) என்பதனை எல்லோரும் தங்களுடைய ஆரோக்கிய முன்னேற்றத்தை அறிந்து கொள்ள பயன்படுத்துகின்றனர். ஆனால் இவ்வகையான விஞ்ஞான அறிவியல் முன்னேற்றங்கள் வருவதற்கு முன்னரே ஒருவன் தன்னுடைய உடல்நிலைக்கேற்ற உணவினை பெற்றுக்கொண்டு ஆரோக்கியமாக வாழ வழிவகை செய்துள்ளமையானது திருக்குறளில் தனிமனித உடல் ஆரோக்கிய முன்னேற்றம் எவ்வகையில் போற்றப்பட்டுள்ளது என்பதனை காட்டுகின்றது.

தனிமனித ஆரோக்கிய முன்னேற்றம் என்பது உடல்சார்ந்தும் ஒழுக்கம் சார்ந்தும் இருப்பதற்கு அப்பால் அவன் தான் சார்ந்து வாழும் சமூகத்தின் ஆரோக்கிய முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருத்தல் வேண்டும். இன்று உலகளாவிய நிலையில் தனிமனிதர்களுக்கிடையில், சமூகத்தவர்களுக்கிடையில் காணப்படும் சமூக இடைவெளி பொருள் சார்ந்த நிலையிலும் ஒழுக்கம் சார்ந்த நிலையிலும், அதிகாரம் சார்ந்த நிலையிலும் அதிகரித்துச் செல்கின்றது. இவ் இடைவெளி சமூகப் பிணக்குகளை ஏற்படுத்துவத்துடன் கொலை, கொள்ளை, வன்முறைகள், முரண்பாடுகள் என கீழான மேம்பாட்டு நிலை நோக்கிச் செல்கின்றது. இந்நிலையில் சமூக ஆரோக்கியம் என்பது ஒவ்வொரு தனிமனிதனுடைய கைகளிலும் உள்ளமையினை திருக்குறள் எண்ணற்ற இடங்களில் குறித்துரைத்துள்ளது. இல்வாழ்க்கை முதல் விருந்தோம்பல், ஈகை, புகழ் வரையான இல்லறவியல் அதிகாரங்களிடையே சமூக முன்னேற்றத்தின்

பொருட்டு தனியனுடைய செயல்களை நெறிப்படுத்தும் வகையிலான கருத்துக்களைக் கூறியுள்ளது.

*அற்றார் அழி பசி தீர்த்தல் அஃது ஒருவன்*
*பெற்றான் பொருள் வைப்புழி (226)*

எனும் குறளில் எதுவும் இல்லாத ஏழையின் கொடிய பசியைப் போக்க வேண்டும் என்பது தனிமனித சமூகம் சார் முன்னேற்றத்தின் அடிப்படை. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பசியே காரணம். பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்பர் ஆன்றோர். உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்திடையேயும் காணப்படும் பொதுவான ஒரு உணர்வு பசி. இது மிகவும் கொடியது. சமூக பசி கொண்ட விலங்கு ஆக்கிரோசமாக காணப்படும். பொதுவாக அதிகமான குற்றச் செயல்களின் அடிப்படையில் பசி அடிப்படையாக இருக்கின்றது. எனவே ஒருவன் தான் சார்ந்திருக்கும் சமூகத்தில் உள்ளவர்களின் பசியைப் போக்குதல் என்பது அவனுடைய சமூக முன்னேற்றத்தின் பொருட்டு அவன் செய்யும் மிக முதன்மையான செயற்பாடு என்பதனை தெளிவாகவே குறிப்பிட்டுள்ளது.

ஆரோக்கியம் என்பது முழுமையான ஒன்று. தனியே உடல், உள சமூக நன்னிலையினை மட்டுமல்லாது ஒவ்வொரு தனியனுடைய ஆன்மீக முன்னேற்றத்தினையும் கொண்டிருத்தல் என்பது ஆரோக்கியத்தின் முழுமையின் வெளிப்பாடு. திருக்குறள் உலகின் எந்தவொரு சமயத்தின் தெய்வங்களையோ, அதன் இறையியல் சிந்தனைகளையோ நேரடியாகக் குறித்துரைக்காத போதும் கடவுள் பற்றியும், அதனோடிணைந்த ஆன்மீக கருத்தினங்கள் பற்றியும் விரிவாகவே குறிப்பிட்டுள்ளது. இவையனைத்தம் ஆன்மீக முன்னேற்றத்தினை அடிப்படைகளை வெளிப்படுத்தி நிற்கின்றது.

கடவுள் வாழ்த்து, துறவறவியல், ஊழ் போன்ற பகுதிகளில் ஆன்மீக முன்னேற்றம் பற்றிய சிந்தனைகள் நிறையவே காணப்படுகின்றன. உலகம் பல்வகைமைத்துவம் கொண்டது. ஒரு கல உயிரினம் முதல் பல்வேறு இயல்புடைய விலங்குகள், தாவரங்கள், பறவைகள், மனிதர்கள் அனைவருடைய வாழ்வியல் வதிவிடமாக காணப்படுவது உலகம். ஆனாலும் இவ் வேற்றுமையில் ஒற்றுமையாக காணப்படுவது ஒன்று

அதுவே இறைவன் எனும் உயரிய ஆன்மிகச் சிந்தனை. இதனை

*அகர முதல வெழுத்தெல்லாம மாதி*
*பகவன் முதற்றே யுலகு (01)*

என்ற முதற் குறட்பாவில் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. வாழ்வின் சூட்சுமம் தெரியாத மனிதர்களிடையே அவர்களின் செயல்கள் தான் அவற்றின் அடிப்படை எனும் கருமவியலாகும். இச் சிந்தனையை

*பிறர்கின்னா முற்பகற் செய்யிற் தமக்கின்னா*
*பிற்பகற் றாமே வரும் (319)*

ஒருவன் முற்பகலில் பிறருக்கு துன்பம் செய்தால் அதுவே அவனுக்கு பிற்பகலில் துன்பமாக வரும் என குறிப்பிட்டுள்ளது. ஊழ் எனும் அதி காரத்தில் ஒருவன் தற்போது அனுபவிக்கின்ற துன்பங்களை முன் வினைப் பயன் வழிப்பட்டதாக உணர்ந்து கொள்ளும் ஆற்றலை தனியன் களுக்கு வழங்குகின்றது. ஆன்மீக முன்னேற்றத்தின் முதன்மையான பண்பியல்பு நிலையாமை எனும் உணர்வு. இதனை திருக்குறள்

*குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே*
*யுடம்போடு டுயிரிடை நட்பு (338)*

அதாவது எப்படி ஒரு பறவையானது தான் வசித்து வந்த கூட்டை விட்டு பறந்து செல்வது போன்று உயிரானது உடம்பை விட்டு செல்லக் கூடியது. அதாவது வாழ்வில் எதுவும் மனிதனுக்குரியதன்று. அதனால் தான் செயலில் பற்றற்றுச் செயற்பட்டு பற்றற்ற இறைநிலையினை சென்றடைதல் என்பதனை

*பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு (350)*

எனக் குறித்துரைக்கின்றது. அதாவது பற்று இல்லாத இறைவனைப் பற்றுவதே ஆன்மீக முன்னேற்றத்தின் அடிப்படை என்பதனை மேற்படி குறள் வழியாக திருகுறள் தெளிவுபடுத்தியுள்ளது. மனித வாழ்வின் முதன் மையான இலக்குகளில் ஒன்றாக ஆன்மீக முன்னேற்றம் காணப்படு கின்றது. ஆன்மீக முன்னேற்றம் என்பது இறையுணர்தல், செயலில்

பற்றற்ற நிலை, அனைவருக்கும் அன்பு பாரட்டுதல் போன்ற இன்னோரன்ன கருத்துக்களின் வழியாக அடையப்பெறும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் சமூக முன்னேற்றத்தின் ஆன்மீக முன்னேற்றம் என்பது அவசியமான ஒன்றாகக் விவரித்திருப்பது நோக்கத்தக்கது. இவ்வாறாக ஆரோக்கிய முன்னேற்றத்தின் வழியாக சமூக முன்னேற்றம் என்பது மக்களிடையே எழுச்சியடைய திருக்குறள் பல்வேறு சிந்தனைகளை முன்வைத்துள்ளமையானது இங்கு கவனிக்கத்தக்கது.

சமூக முன்னேற்றம் பற்றிய சிந்தனைகளும் கருத்தியல்களும் திருக்குறள் முழுவதும் வியாபித்திருந்தாலும் நீதிநெறிமுறைசார் சமூக முன்னேற்றம் முதல் ஆரோக்கிய முன்னேற்றம் வரையாக பல்வேறுபட்ட சமூக முன்னேற்றச் சிந்தனைகளின் அடிப்படையில் திருக்குறளில் காணப்படும் சமூக முன்னேற்றம் தொடர்பாக இக்கட்டுரை பகுப்பாய்வு செய்து முன்வைத்துள்ளது.

**4**

சமூக முன்னேற்றம் என்பது முழுதளாவிய தன்மை வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. ஒன்றோடு ஒன்று தொடர்புடைய பல்வேறு தனித் தன்மை வாய்ந்த முன்னேற்றங்களின் கூட்டிணைவாகவே சமூக முன்னேற்றம் காணப்படுகின்றது. இன்னொரு வகையில் கூறினால் சமூக மேம்பாட்டின் அடிப்படைப் பண்புக் கூறுகளின் ஒன்றாக அமைவது சமூக முன்னேற்றமாகும். இற்றைக்கு பல நூறு வருடங்களுக்கு முன்னரே பண்டைத் தமிழச் சமூக முன்னேற்றத்தின் பொருட்டும் உலக பன்மை பண்பாட்டுச் சமூகத்தின் (global multi-cultural society) முன்னேற்றத்தின் பொருட்டும் மிக அரிய பெரிய கருத்தினங்களை உள்ளடக்கிய விலைமதிப்பற்ற ஆவணமாக எழுச்சி பெற்ற நூல் திருக்குறள் ஆகும்.

சமூக கட்டமைப்பு மாற்றம், அதன் இயக்கம், அதன் வழியாக கிடைக்கப்பெறும் முன்னேற்றம் ஆகியவற்றை குறித்துரைக்கும் ஒரு கருத்தியல் சிந்தனையாக வெளிப்பட்டது அபிவிருத்தி எனும் எண்ணக் கருவாகும். அபிவிருத்தி என்பதனை சமூக பண்பாட்டு உணர்திறனோடு இணைத்து நோக்கும் போது அதற்கு நிகராக மேம்பாடு என்ற சொல் மிகப்

பொருத்தமாக அமைகின்றது. மேம்படுதல், மேன்னிலை அடைதல், மேன்மையுறல் ஆகிய பல்வேறு தனித்துவமான கருத்தினங்களின் உள்ளடக்காக திகழும் மேம்பாட்டுக்கு அடிப்படையாக அமைவது முன் னேற்றம் ஆகும். அதாவது முன்னோக்கி நகர்ந்து செல்லுதல். மனிதன் தன்னுடைய வாழக்கையின் அத்தியாவசியமாகக் காணப்படும் அனைத் திலும் முன்னேற்றத்தினை அடைந்து செல்வதன் வழியாக தன்னையும் தான் சார்ந்த சமூகத்தினையும் மேன்னிலைக்கு கொண்டுவர முடியும்.

மேம்பட்ட வாழ்வு என்பது மனித நாகரிக வளர்ச்சியின் அடிப்படை. அதாவது அலைந்து திரிந்து வேட்டையாடி உணவு சேகரித்து வாழ்ந்த மனிதன் நிலையான ஓர் இடத்தில் விவசாயம் செய்ய முற்பட்டதும், அதன் வழியாகக் கிடைக்கப்பெற்ற மிகைகளை மூலதனமாகக் கொண்டு வாழ் வின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ள முயன்றமை யும் நகர மையப்பட்ட சிக்கலான சமூகக் கட்டமைப்புடன் கூடிய பன்மிய பொருளாதார இயல்புகளுடனான அரசு எனும் அமைப்பின் தோற்றத்திற்கு வழிநடத்தியது. இவ் அரசு விவசாயம் சார் தொழில்முறையின் முன்னேற் றம், அறிவியல், கட்டமைப்பு, கலை மற்றும் பொழுதுபோக்கு தன்மை யுடன் கூடிய நகரமயப்பட்ட நாகரிக சமூக உருவாக்கத்திற்கு இட்டுச் சென் றது. எனினும் அவற்றின் மேன்மையை தொடர்ச்சியுறச் செய்யவும் பேணிப் பாதுகாக்கவும் வேண்டிய சமூகச் சூழமைவின் வெளிப்பாடாக அமைந் ததுவே திருக்குறள் எனும் அறநெறி இலக்கியமாகும். இது தனியே தனிமனிதன் சார் ஒழுக்கத்தின் முன்னேற்றத்தினை மட்டுமன்றி கல்வி, பொருளாதாரம், அரசியல், ஆரோக்கியம் சார் முன்னேற்றங்கயைும் அதற்கான வழிகாட்டல் சிந்தனைகளையும் முன்வைத்துள்ளமையி னைக் இக்கட்டுரையின் வழியாக அறிய முடிகின்றது.

முன்னேற்றத்தின் அடிப்படையில் உறைந்து நிற்பது மாற்றம் எனும் செயன்முறை. பொதுவாகவே மாற்றம் என்பது இரு பக்க தன்மையுடை யது. ஒன்று மேல் நோக்கியதாகவும் மற்றையது கீழ் நோக்கியதாகவும் காணப்படும். இன்றைக்கு 3500 வருடங்களுக்கு முன்னரே உலகின் பல பகுதிகளில் நாகரிகங்கள் தோன்றியுள்ளன. ஆனால் இன்று பண்டைய நாகரிக பிரதேசங்கள் எல்லாம் மேம்பட்டுள்ளனவா என்றால் இல்லை. ஏனெனில் அங்கு நாகரிக நிலையடைந்த பின்னர் நிகழ்ந்த

மாற்றங்கள் புதிய உலக ஒழுங்குக்கேற்ப தக்கவைப்பதற்கு மாறாக இறங்கு முகம் நோக்கிய பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது. எடுத்துக் காட்டாக பண்டைய எகிப்து இன்றைய எகிப்தினுடைய நிலையையும் ஒப்பீட்டு நோக்கினால் புலப்படும்.

மாற்றம் என்பது முன்னோக்கியதாக இருத்தல் அவசியம். எனவே திருக்குறளும் சமூக முன்னேற்றத்தின் முன்னோக்கிய மாற்றத்திற்கான வழிவகைகளை பல்வேறு அத்தியாயங்களில் குறித்துரைத்துள்ளதுடன் மேலதிகமாக கீழ் நோக்கிய மாற்றத்தின் விளைவுகளையும் இடித்துரைத் துள்ளது. எடுத்துக்காட்டாக கல்வி எனும் அதிகாரத்தில் கல்விசார் முன்னேற்றத்தின் தனித்துவங்களை குறிப்பிட்ட திருக்குறள் கல்லாமை எனும் அதிகாரத்தில் கல்வி கற்காததன் விளைவினை வலியுறுத்தி யுள்ளது. இவ்வாறே செங்கோன்மை - கொடுங்கோன்மை, உழவு- நல்குரவு, ஒழுக்கமுடமை - கூடாவொழுக்கம், நட்பு - தீ நட்பு என மாற்றங் களின் இரட்டை முகங்களை குறிப்பிட்டு சமூக முன்னேற்றத்தின் அடிப் படைகளை தெளிவுறுத்தியுள்ளது.

மேம்பாடு பற்றிய பல்வேறு விளக்கங்களிடையே மாக்சிய மற்றும் மாக்சியம் அல்லாதவர்களின் விளக்கங்கள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது (சண்முகலிங்கன் 1997). மாக்சிய சிந்தனைக்கு எதிரானவர்கள் அதாவது முதலாளித்துவ சிந்தனையாளர்கள் சமூக மேம்பாட்டினை வாழ்க்கை தர வளர்ச்சியாகவே காண்கின்றனர். வாணர் என்பர் சமூகத்தில் மக்கள் வாழ்விற்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதே மேம்பாடு என்பார் (Warner 1971 மேற்கோள் சண்முகலிங்கன் 1997). ஆனால் மறுபுறத்தி மாக்சிய சிந்தனையாளர்கள் அனைவருக்கும் அனைத்து வசதி வாய்ப்புக்களும் சம அளவில் கிடைத்தலை உறுதிப் படுத்தல் என வரையறை செய்கின்றனர். மாக்சிய சிந்தனாவாதிகளில் ஒருவரான கிம் என்பர் வாழ்வின் அனைத்து தளங்களிலும், குறிப்பாக சமூக - பொருளாதார நீதி, பொருளாதாரச் செழிப்பு, அரசியல் சுதந்திரம், சுகாதாரம், கல்வி என்பவற்றில் தமக்குரிய பங்கினைப் பெற முடியாத வாறு மறுக்கப்பட்ட மக்கள், எந்தளவிற்கு அவற்றினை கேட்கவும், பெறவும் முடிகின்றது என்பதனைப் பொறுத்தே சமூகமேம்பாடு (Kim 1973 மேற்கோள் சண்முகலிங்கன்) என்கிறார்.

மேற்குறிப்பிட்ட இருவேறு கருத்தினங்களையும் தன்னகத்தே உள்ளடக்கிய ஒன்றாகவே திருக்குறள் காணப்படுகின்றது. திருகுறளில் கூறப்படும் கருத்தினங்கள் மக்கள் தமக்குரிய நற்குண இயல்புகளையும், வசதி வாய்ப்புகளை முன்னேற்ற கடமைப்பட்டவர்கள் அதே நேரம் ஏனையோருக்கும் தங்களால் இயன்றவற்றை ஆற்றவும் கடமைப்பட்ட வர்கள் என்பதனை வலியுறுத்தி கூறியுள்ளமையினைக் காணலாம். சமூக மேம்பாட்டினை ஏற்படுத்திக்கொள்ள நவீனமயமாதல் (theory of modernization), மேற்கிளம்புகை (theory of take off) போன்ற எண்ணற்ற கருத்தினங்கள் விருத்தி பெற்றிருந்தாலும் இற்றைக்கு 2000 வருடங்கள் பழமையான திருக்குறள் சமூக முன்னேற்றத்திற்குரிய எண்ணற்ற கருத்துக்களையும் (concepts) அவற்றின் வழியாக கூட்டிணைந்த கருத்தியல்களையும் (ideologies), அதன் விளைவான பல தத்துவார்ந்த கோட்பாடுகளையும் (philosophical theories) உள்ளடக்கிய ஒன்றாக இன்றுவரை காணப்படுகின்றது.

சமூக முன்னேற்றம் என்பது வெளியிலிருந்து வருகின்ற ஒன்றல்ல, ஒவ்வொரு சமூகமும் அதனைச் சேர்ந்த தனியன்களும் ஒன்றிணைந்து பெற்றுக்கொள்கின்ற ஒரு சமூக மாற்றம். இவ்வகையான சமூக மாற்றத் திற்குரிய சிந்தனைகளையும், கருத்தியல்களையும் அவற்றினை நடை முறைப்படுத்தும் வழிவகைகளையும் மிக எளிமையாகவும், பொருத்த மான உவமை, உருவகங்களின் துணைக்கொண்டு மக்களிடையே இன்றும் நீடித்து நிலைபெற்று வாழும் ஒரு உயிர்புடை நூலாகவே திருக் குறள் காணப்படுகின்றது. திருக்குறளில் கூறப்பட்டுள்ள சமூக முன்னேற் றத்திற்குரிய சிந்தனைகளும், கருத்தியல்களும் அக்காலத்திற்கு மட்டு மன்றி இக்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் மிக்க பயனைத்தரும்.

## உசாத்துணை நூல்கள்


- சண்முகலிங்கன். என். 1997. மேம்பாட்டின் சமூகவியல். மானுடம் 1: 99-103. யாழ்ப்பாணம், சமூகவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
- சிறிநிவாஸன், வி.1961. வள்ளுவர் கண்ட நல்வாழ்வு. மதுரை: கோல்டன் பிரஸ்.

- பக்தவசத்சல பாரதி. 2005. மானிடவியல் கோட்பாடுகள். புதுவை: வல்லினம்.
- பட்டுச்சாமி ஓதுவார், தி. (1959). திருக்குறள் உரைக்கொத்து (பரிமேலழகர், மணக்குடவர், பரிபெருமாள், பரிதியார், காலிங்கர் உரைகளுடன். திருசப்பனந்தாள்: காசிமடம்
- புலியூர் கேசிகன். 2010. திருக்குறள் புதிய உரை. சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
- Bernard, L. L. 1922. The Conditions of Social Progress. American Journal of Sociology 28, 1: 21-48.
- Callahan, Daniel. 1973. The WHO Definition of 'Health'. The Hastings Center Studies, 1, 3: 77-87
- Noll, Heinz-Herbert. 2014. Societal Progress. in A. Michalos (ed.). Encyclopedia of Quality of Life Research. pp: 6199 -6205. London: Springer.
- Sumathi, K., & G.R.Valliammal. 2018. A Study on the Moral Reforms of Thiruvalluvar. Asian Journal of Applied Science and Technology, 2, 1: 1 – 5.